# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 9 | 4 Pages | 10.08.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| 4மலர் : 01 | இதழ் : 9 | 4 பக்கங்கள் | 10.08.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வன்முறை பாதித்த பகுதிக்குச் செல்லமுயன்ற அரியானா காங்கிரஸ் தூது குழு தடுத்து நிறுத்தம்



சண்டிகர், ஆக. 10

அரியானா மாநிலம் நூ மாவட்டத்தில் ஜூலை 31ம் தேதி விஸ்வ இந்து பரிஷத்அமைப்பின்ஊர்வலத்தின்போதுகல்வீச்சுசம்பவத்தைதொடர்ந்து பெரும் வன்முறை வெடித்தது. கடைகள், வாகனங்கள் உள்ளிட்டவை தீக்கிரையாக்கப்பட்டன. வன்முறையில் 2 ஊர்க்காவல்படை வீரர்கள் உள்பட 6 பேர் பலியானார்கள். இதுதொடர்பாக 142 எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டு 300க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், அங்குள்ள எதிர்கட்சியான அரியானா காங்கிரஸ் சார்பில் 10 பேர் கொண்ட தூதுக்குழு அமைக்கப்பட்டு, வன்முறை நடந்த நூ பகுதிக்கு செல்ல தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் நேற்று அங்கு செல்ல முயன்றபோது ரோஜ்கா மியோ கிராமத்தின் எல்லையில் அவர்கள் போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதையடுத்து அவர்கள் அங்கிருந்து திரும்பி சென்றனர்.


## பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்தக்கோரி டெல்லியில் அரசு ஊழியர்கள் சங்கங்கள் பேரணி



டெல்லி, ஆக. 10

டெல்லி ராம்லீலா மைதானத்தில் பழைய பென்சன் திட்டத்தை மீண்டும் அமல்படுத்தக்கோரி மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களின் சங்கங்கள் பேரணிநடத்த உள்ளனர். இந்த பேரணி இன்று நடைபெற உள்ளது. பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீட்டெடுப்பதற்கான கூட்டு அமைப்பு/தேசிய கூட்டு நடவடிக்கை கவுன்சில் ஆகியவை இந்த பென்சன் உரிமை மகாபேரணிக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதுகுறித்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீட்டெடுப்பதற்கான கூட்டு அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மற்றும் இந்திய ரெயில்வே ஆண்களுக்கான பெடரேசன் பொது செயலாளர் ஷிவ் கோபால் மிஷ்ரா கூறுகையில் ''2014 ம் ஆண்டு ஜனவரி 1ல் இருந்து புதிய பென்சன் திட்டம் அமல்படுத்தப்பட்டதற்கு, அரசு ஊழியர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். பழைய ஓய்வூதியம் திட்டத்தில் இருந்து புதிய ஓய்வூதியத்திற்கு தள்ளப்பட்டுள்ளதால், எதிர்காலம் குறித்து அவர்கள் கவலைப்படுகிறார்கள். லட்சக்கணக்கான ஊழியர்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாங்கள் இந்த கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோம். நாளை காலை 9.30 மணிக்கு பேரணி நடைபெறும்'' என்றார். மத்திய, மாநில, ரெயில்வே, ஆசியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் இந்த பேரணியில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

## ஜி20 மாநாட்டில் உக்ரைன் போர்தான் முக்கிய தலைப்பாக இருக்கும்: அமெரிக்கா



அமெரிக்கா, ஆக. 10

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் அடுத்த மாதம் ஜி20 மாநாடு நடைபெறுகிறது. இதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள்பங்கேற்க இருக்கிறார்கள். இந்தஜி20 மாநாட்டில் உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்தி வருவதுதான் முக்கிய தலைப்பாக இருக்கும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. ''எங்களுடைய கூட்டணி நாடுகளுடன் நடைபெறும் உரையாடலில் உக்ரைன் போர் குறித்ததுதான் முக்கிய தலைப்பாக இருக்கும். இனிவரும் உரையாடல்களில் இதற்குதான் முக்கியத்துவம். ஜி20 மாநாட்டில் இது உண்மையாக இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை'' என அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் தெரிவித்துள்ளார். ரஷியா உக்ரைன் மீது தாக்குதல் தொடங்கி சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை. தற்போது டிரோன் தாக்குதல் அதிகரித்துள்ளது. உக்ரைன் தானிய ஏற்றுமதி செய்ய முடியாத அளவிற்கு ரஷியா முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இது உலகளவில் தானிய தட்டுப்பாட்டிற்கு வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கேரள சட்டசபையில் பொது சிவில் சட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றம்

திருவனந்தபுரம், ஆக. 10

கேரளமாநிலசட்டசபைக்கூட்டத்தொடர்கடந்த7ம்தேதிதொடங்கியது. தொடரின் முதல் நாளில் முன்னாள் முதல் மந்திரி உம்மன் சாண்டியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றைய தினம் கேரள சட்டசபை கூடியது. அப்போது மத்திய அரசின் பொது சிவில் சட்டத்திற்கு எதிராக முதல் மந்திரி பினராயி விஜயன் தலைமையிலான கேரள அரசு தீர்மானம் கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது பேசிய பினராயி விஜயன், பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்பட்டால் இந்திய அரசியலமைப்பின் மதச்சார்பற்ற தன்மை வீழ்த்தப்படும். உண்மையான பிரச்சினைகளில் மக்களின் கவனத்தை பா.ஜ.க. திசை திருப்பி வருகிறது என குற்றம் சாட்டினார். கேரள அரசு கொண்டு வந்த தீர்மானத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் வி.டி.சதீசன் ஆதரவு தெரிவித்தார். இதையடுத்து பொது சிவில் சட்டத்திற்கு எதிரான தீர்மானம் கேரள சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

# 3987 ஹஜ் பயனாளிகளுக்கு தலா ரூ.25,070 மானியத்தொகை: முதலமைச்சர் வழங்கினார்

சென்னை, ஆக 10

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சீரிய முயற்சியின் பலனாக, இந்த ஆண்டுஹஜ்பயணத்திற்குசென்னை புறப்பாட்டுத் தளமாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டு பயணிகள் சென்னையில் இருந்து ஹஜ் பயணம் மேற்கொண்டு, தங்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றி தாயகம் திரும்பியுள்ளனர்.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதன்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு அரசு ஹஜ் மானியம் வழங்கி வருகிறது. அதற்காக இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,

தகுதியுள்ள பயனாளி ஒருவருக்கு






ரூ.25,070 வீதம் 3,987 பயனாளிகளுக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 5 பயனாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலா ரூ.25,070க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் முகம்மது நஜிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மை நல இயக்குநர் மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வருகிற 12ந்தேதி முதல் 20ந்தேதி வரை பாபநாசம் அகஸ்தியர் அருவிக்கு செல்ல 9 நாட்கள் தடை

நெல்லை, ஆக. 10

பாபநாசம்காரையாறு சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழா ஒவ்வொரு ஆண்டும் வெகு விமர்சையாக கொண்டாடப்படும். இந்த திருவிழாவின் போது ஏராளமான பொதுமக்கள் ஒரு வாரத்துக்கு முன்பே கோவில் அருகே குடில் அமைத்து தங்குவார்கள். இந்த ஆண்டு ஆடி அமாவாசை திருவிழா வருகிற 16ந்தேதி நடக்கிறது. இதனை ஒட்டி வனத்துறை சார்பில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கோவில் பராமரிப்பு பணி சம்பந்தமாகவும், வனப்பகுதிகளில் வன விலங்கு பாதுகாப்பு மற்றும் மனித, வன விலங்கு மோதலை தடுக்கும் விதமாகவும், சரணாலயம் சுத்தம் செய்யும் பணிக்காக பாபநாசம் வனத்துறை சோதனைசாவடி வருகிற 13, 14ந்தேதிகளில் மூடப்படுகிறது. இதற்காக வருகிற 12ந்தேதி முதல் 20 ந்தேதி வரை 9 நாட்கள் அகஸ்தியர் அருவிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்படுகிறது. இந்த தகவலை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக அம்பை கோட்ட இணை இயக்குனர் செண்பகப் பிரியா தெரிவித்துள்ளார். இதற்கிடையே,



சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் கள ஆய்வின்போது கோவில் அருகில் செல்லும் மின்பாதையை பாதுகாப்பான இடைவெளியுடன் சற்று உயர்த்துவதற்கு சுட்டிக் காட்டப்பட்டது. இதையடுத்து மேற்பார்வை பொறியாளர் சந்திரசேகரன் உத்தரவுப்படி செயற்பொறியாளர் சுடலையாடும் பெருமாள், உதவி செயற்பொறியாளர் ராமகிளி ஆகியோர் ஆலோசனையின் பேரில் இளநிலை பொறியாளர் விஜயராஜ் தலைமையில் பணியாளர்களால் உடனடியாக மின்வயர்கள் உயர்த்தப்பட்டது.

## சினிமாவில் நடிக்கும் ஆசையில் சென்னைக்கு வந்த ஈரோடு மாணவர்கள்: போலீசார் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைப்பு

சென்னை, ஆக. 10

ஈரோட்டைச் சேர்ந்த முருகேசன், சசிகுமார் ஆகிய இருவர் தங்களுடைய 14 வயது மகன்களை நள்ளிரவு முதல்காணவில்லை எனஈரோடு ரெயில்வே காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

மேலும், ரெயில் மூலம் வெளியூர் சென்றிருக்கலாம் எனவும் தங்களது சந்தேகத்தை தெரிவித்தனர். இதனையடுத்து அவர்களிடமிருந்து சிறுவர்களின் விவரங்களை பெற்று அனைத்து ரெயில்வே காவல் நிலையங்களுக்கும் தகவல் தெரிவித்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

மேலும் அவர்கள் வைத்திருக்கும் செல்போன் எண்ணை வைத்து அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என சைபர் செல் மூலம் கண்காணித்தபோது அவர்கள் சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையம் அருகே இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து சென்னை சென்ட்ரல் ரெயில்வே காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் உடனடியாக சிறுவர்களை மீட்க வேண்டி சென்னை மாநகர காவல்துறையினருடன் இணைத்து சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தின் சுற்றுப்புறத்தில் தேடி மேற்படி சிறுவர்கள் இருவரையும் கண்டுபிடித்து காவல் நிலையம் அழைத்து வந்தனர்.

சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ள தகவல் அவர்களுடைய பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள்வந்தவுடன்சிறுவர்களுக்கு முறையான அறிவுரைகள் வழங்கி பெற்றோர் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

துரிதமாக செயல்பட்டு ஈரோட்டில்இருந்துரெயில்மூலம்சென்னை வந்து சுற்றித்திரிந்த சிறுவர்களை கண்டுபிடித்து மீட்ட காவல்துறையினர்களை காவல் துறை உயர் அதிகாரிகள் பாராட்டினார்கள்.

10ம் வகுப்பு படிக்கும் அந்த மாணவர்களிடம் விசாரிக்கும்போது ''தாங்கள் இருவரும் நண்பர்கள். சரியாக படிக்கவில்லை என்று பெற்றோர்கள் திட்டியதால் வீட்டில் இருந்து வெளியேற முடிவு செய்தோம். சினிமாவில் நடிக்கும் ஆசையில் சென்னைக்கு வந்தோம் என்றனர். ரெயில் பயணிகள் பாதுகாப்பு சம்மந்தமான புகார்களுக்கு ரெயில்வே காவல் உதவி மைய 24★7 எண். 1512 மற்றும் வாட்ஸ்அப் எண். 9962500500 ஐ தொடர்பு கொள்ளவும்.

## டாஸ்மாக் கடையை அகற்ற எதிர்ப்பு தெரிவித்த மதுபிரியர்களை விரட்டியடித்த பெண்கள்

பல்லடம், ஆக. 10

மதுபானகடையை அங்கிருந்து அகற்றக்கோரி பொதுமக்கள் மதுபானக்கடை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள் குடிமகன்களை விரட்டியடித்தனர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் செட்டிபாளையம் சாலையில் அரசு டாஸ்மாக் மதுபானக்கடை செயல்பட்டு வருகிறது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த கடைக்கு தினமும் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் மது வாங்க வருகின்றனர். இந்தநிலையில் அங்கு மது வாங்க வரும் சிலர் அங்கேயே குடித்துவிட்டு அருகிலுள்ள கடைகளுக்கு சென்று படுத்து உறங்குவதும்,ரோட்டிலேயே இயற்கை உபாதைகளை கழிப்பதும் என அந்த இடத்தையே அசிங்கப்படுத்தி வருவதாக பொதுமக்கள் தொடர்ந்து புகார் தெரிவித்து வந்தனர். இந்தநிலையில் மதுபான



கடையை அங்கிருந்து அகற்றக் கோரி பொதுமக்கள் மதுபானக் கடை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் பல்லடம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ., எம்.எஸ்.எம். ஆனந்தன், நிர்வாகிகளுடன் கலந்து கொண்டார். ஆர்ப்பாட்டத்தில் அவர் பேசுகையில், பொது மக்களுக்கு இடையூறாக அமைந்துள்ள இந்த மதுபான கடையை அகற்றக் கோரி மாவட்ட கலெக்டரிடம் மனு அளிக்க உள்ளேன். மேலும் தமிழக அரசு 500 மதுபான கடைகளை அகற்றுவதாக அறிவித்து விட்டு வியாபாரம் குறைவாக உள்ள மதுபான கடைகளை மட்டுமே மூடி உள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள மதுபான கடைகளை மூட வேண்டும் என்றார். ஆர்ப்பாட்டத்தை முடித்துக் கொண்டு எம்.எல்.ஏ.,காரை நோக்கி சென்ற போது அவரை சூழ்ந்து கொண்ட குடி மகன்கள் சிலர், மதுபான கடையை மூடக்கூடாது.

நகரபகுதியில் இந்தக்கடை மட்டுமே உள்ளது. எனவே இங்கிருந்து மதுபான கடையை மாற்றக்கூடாது என கோரிக்கை விடுத்தனர். அப்போது ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள் குடிமகன்களை விரட்டியடித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# தென்னைக்கு மாற்றாக பழப்பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டும் உடுமலை விவசாயிகள்

உடுமலை, ஆக. 10

உடுமலை வட்டாரத்தில் விளைநிலங்களில் கிணறு மற்றும் போர்வெல் அமைத்து பல ஆயிரம் ஹெக்டேரில், நீண்ட கால பயிரான தென்னை மற்றும் இதர காய்கறி சாகுபடிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.அவ்வகையில் உடுமலை வட்டாரத்தில் பிரதான சாகுபடியாக தென்னை 18,252 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.தென்னைக்கு அடுத்தபடியாக காய்கறி சாகுபடி பரப்பு இந்த வட்டாரத்தில் அதிகமுள்ளது. குறிப்பாக ஆண்டு முழுவதும் தக்காளி, கத்தரி, பச்சை மிளகாய் சாகுபடியாகிறது. மாநிலம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய தக்காளி உற்பத்தியில் உடுமலை வட்டாரம் முன்னிலை வகிக்கிறது.கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 171 ஹெக்டேர் பரப்பில் தக்காளிசாகுபடிக்குநாற்று நடவு செய்யப்பட்டுள்ளது. அடுத்தபடியாக சின்னவெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் நடவு செய்துள்ளனர்.இவ்வாறு காய்கறி சாகுபடி ஆதிக்கம் செலுத்தி வந்த பகுதியில் தற்போது படிப்படியாக பழப்பயிர் சாகுபடி பரப்பு மெல்ல, மெல்ல அதிகரித்து வருகிறது.காய்கறி சாகுபடியில் நடவு, களையெடுத்தல், மருந்து தெளித்தல், குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறை அறுவடை என தொழிலாளர்கள் தேவை அதிகமாகும். சீசன் சமயங்களில் போதிய தொழிலாளர்கள் கிடைக்காமல் பல்வேறு பணிகள் பாதித்து விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கின்றனர். அறுவடையின் போது விலை வீழ்ச்சி ஏற்பட்டு நஷ்டத்தை சந்திக்கின்றனர். எனவே மாற்றி யோசிக்க துவங்கியுள்ள விவசாயிகள், தற்போது பழப்பயிர் சாகுபடியில் ஈடுபட துவங்கியுள்ளனர். அவ்வகையில் உடுமலை வட்டாரத்தில் மா சாகுபடி, 690 ஹெக்டேர், மரநெல்லி 82.68, கொய்யா 31.38,சப்போட்டா25.98, மாதுளை2.69,எலுமிச்சை 10;48, பேரீட்சை 2.69 என 962 ஹெக்டேர் பழங்கள் உற்பத்திக்கான செடி மற்றும் மரங்கள் சாகுபடி செய்யப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் இச்சாகுபடி பரப்பு கணிசமாக அதிகரித்து வருகிறது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: பழப்பயிர் சாகுபடிக்கு தொழிலாளர் தேவை குறைவு. சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொள்வதால் தண்ணீரை சிக்கனப்படுத்துவதுடன் எளிதாகவும் பாய்ச்சிக்கொள்ளலாம். சந்தை வாய்ப்புகளை உள்ளூரிலேயே ஏற்படுத்திக்கொடுத்தால் இன்னும் பழப்பயிர் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என்றனர். உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகனரம்யா கூறுகையில், பழப்பயிர் சாகுபடியில், ஈடுபடும் விவசாயிகளுக்கு துறை சார்பில் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. மேலும் அரசின் சிறப்புத்திட்டங்களின் கீழ் தோட்டக்கலைத்துறை நாற்றுப்பண்ணை வாயிலாக விவசாயிகளுக்கு நாற்றும்வினியோகிக்கப்பட்டு வருகிறது என்றார்.தென்னைக்கு மாற்றாக பழப்பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டும் உடுமலை விவசாயிகள்

# சுதந்திர தின விழா: ஆணைக்கல்பாளையம் ஆயுதப்படை மைதானத்திற்கு மாற்றம்

ஈரோடு, ஆக. 10

இந்தியாவின் சுதந்திர தின விழா ஒரு மாதம் ஆகஸ்ட் 15ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை ஒவ்வொரு ஆண்டும் ஈரோடு வ. உ. சி. விளையாட்டு மைதானத்தில் சுதந்திர தின விழாக்கோலாகலமாக நடைபெற்று வருகிறது. சுந்திர தினத்தன்று கலெக்டர் இந்திய தேசிய கொடியை ஏற்றி வைத்து போலீஸ் மரியாதையை வாகனங்கள் சென்று பார்வையிடுவார். அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சி நடைபெறும். சுதந்திர போராட்ட வீரர்கள் தியாகிகள் கவுரவிக்கப்படுவார்கள். இந்நிலையில் இந்த வருடத்திற்கான சுதந்திர தின விழா ஈரோடு வ.உ.சி. விளையாட்டு மைதானத்திற்கு பதில் ஆணைக்கல்பாளையத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. ஈரோடு வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் தற்போது செயற்கை இலை ஒடுதளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதன் காரணமாக இந்த ஆண்டு சுதந்திர தின விழா அங்கு நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சுதந்திர தின விழா ஆணைக்கல்பாளையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கலெக்டர் ராஜகோபால் சுன்கரா சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆணைக்கல்பாளையத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் தேசிய கொடியை ஏற்றுகிறார். பின்னர் போலீஸ் மரியாதையை ஏற்றுக்கொள்கிறார். அதைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.



# மின்னணு வேளாண் சந்தை மூலம் இந்தியா முழுவதும் மக்காச்சோளம் விற்பனை

மடத்துக்குளம், ஆக. 10

மடத்துக்குளம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு நெல், கரும்பு, தென்னை, வாழை மற்றும் காய்கறிப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதுதவிர மக்காச்சோளம் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இங்கு தென் மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் மானாவாரியில் அதிக அளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. இது தவிர இறவைப் பாசனம் மற்றும் சொட்டுநீர்ப் பாசனத்திலும் மக்காச்சோளம் சாகுபடி செய்து வருகின்றனர். இந்தநிலையில் மக்காச்சோளத்துக்கு கடந்த சில நாட்களாக சீரான விலை கிடைத்து வருவது குறித்து விவசாயிகள் கூறியதாவது 'மக்காச்சோள சாகுபடியைப் பொறுத்தவரை, கடந்த சில ஆண்டுகளாக படைப்புழுக்கள் தாக்குதல் பெரிய அளவில் உள்ளது. எனவே படைப்புழுக்கள் கட்டுப்பாட்டுக்கென பெருமளவு செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. மேலும் உரம், ஆள் கூலி உள்ளிட்ட அனைத்தும் உயர்ந்துள்ளது. இதனால் உற்பத்திச்செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது. கோழித்தீவன உற்பத்தியில் முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் உள்ளது. இதனால் ஆண்டு முழுவதும் மக்காச்சோளத்துக்கான தேவை உள்ளது. ஆனாலும் கோழித்தீவன உற்பத்தி நிறுவனங்கள் ஒடிசா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்து மக்காச்சோளம் கொள்முதல் செய்வதால் உள்ளூரில் போதிய விலை கிடைக்காத நிலை இருந்து வந்தது. இந்தநிலையில் பிற மாநிலங்களில் மழையால் பாதிப்பு ஏற்பட்டு மக்காச்சோள வரத்து குறைந்துள்ளது. அத்துடன் தமிழகத்திலும் மக்காச்சோள சாகுபடி குறைந்த அளவிலேயே உள்ளது. இதனால் கடந்த காலங்களில் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம் ரூ.1,800க்கும் குறைவாகவே விற்பனையான நிலையில் தற்போது ரூ.2,300க்கு விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இநாம் எனப்படும் மின்னணு வேளாண் சந்தை மூலம் இந்தியா முழுவதும் உள்ள வணிகர்களிடம் மக்காச்சோளம் விற்பனை செய்ய முடிகிறது. இதனால் உள்ளூர் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து விலை குறைப்பில் ஈடுபடுவது தவிர்க்கப்படுகிறது. தென்மேற்குப்பருவமழை தொடங்கி, மக்காச்சோளம் சாகுபடி தொடங்கி, அறுவடைக்காலம் வரை வரத்து குறைவாகவே இருக்கும். எனவே இன்னும் சில மாதங்களுக்கு விலை குறைய வாய்ப்பில்லை என்று நம்பியுள்ளோம்' என்று விவசாயிகள் கூறினர்.




# நகராட்சி பெண் அலுவலர் வீட்டில் 13 பவுன் நகை கொள்ளை

தருமபுரி, ஆக. 10

தருமபுரி பெரியாண்டிச்சி கோவில்தெருவள்ளி நகரைச் சேர்ந்தவர் செல்வம். இவரது மனைவி வசந்தா (வயது38). இவர் சேலம் மாவட்டம் இளம்பிள்ளை நகராட்சியில் எழுத்தராக வேலை பார்த்து வருகிறார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு இவரது கணவர் செல்வம் இறந்து விட்டார்.

இதனால் வசந்தா தனது குழந்தைகளுடன் தருமபுரியில் தனியாக வசித்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு வசந்தா வீட்டில் தூங்க சென்றார்.

நேற்று காலை விடிந்து எழுந்து பார்த்தபோது வீட்டிற்குள் பீரோவில் உள்ள பொருட்கள் சிதறி கிடந்தன. அப்போது அவர் பீரோவில் வைத்திருந்த 3½ பவுன் நெக்லஸ், 2 பவுன் செயின், 2பவுன் வளையல்கள், 3பவுன் தோடு, 1½ பவுன் 5 மோதிரங்கள் உள்பட 13 பவுன் தங்க நகைகளும், 2 ஜோடி வெள்ளி கொலுசையும் மர்ம நபர்கள் திருடி சென்றது தெரியவந்தது. இந்த சம்பவம் குறித்து வசந்தா தருமபுரி டவுன்போலீஸ் நிலையத்தில் புகார் தெரிவித்தார்.

உடனே போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் விஜய்சங்கர்மற்றும்போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டனர். பின்னர் மோப்ப நாய் மற்றும் தடயவியல் நிபுணர்களை வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரித்தனர்.

இந்த திருட்டு சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த பகுதிகளில் உள்ள சி.சி.டி.வி. கேமிராவில் பதிவான காட்சிகளை வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தருமபுரியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மர்ம நபர்கள்தொடர்கொள்ளை முயற்சியில் ஈடுபட்டு வந்த நிலையில் நகராட்சி எழுத்தர் வீட்டில் 13 பவுன் நகைகளை கொள்ளையடித்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியையும், பரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# கவிதை போட்டியில் சிறப்பிடம் பிடித்த பள்ளி மாணவனுக்கு பாராட்டு

மன்னார்குடி, ஆக. 10

திருவாரூர் மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான கவிதை போட்டி நடைபெற்றது. கலெக்டர் சாருஸ்ரீ மாணவனை பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி துறை சார்பில் திருவாரூர் மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான கவிதை போட்டி நடைபெற்றது. இதில் மன்னார்குடி கூட்டுறவு அர்பன் வங்கி நகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவன் யோகேஷ்ராஜ் 2ம் இடம் பிடித்தார். இதையடுத்து மாவட்ட கலெக்டர் சாருஸ்ரீ மாணவனை பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை வழங்கினார். பின்னர், மாணவன் யோகேஷ்ராஜையும், அவரது பெற்றோரையும், மாணவனை போட்டிக்கு தயார் செய்த தமிழாசிரியர் ராசகணேசனையும், மன்னார்குடி நகர்மன்ற தலைவர் சோழராஜன், துணை தலைவர் கைலாசம் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் ஸ்ரீதர் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



# ராவணபுரம் கிராமத்தில் பழுதடைந்த சாலையால் பொதுமக்கள் அவதி

உடுமலை, ஆக. 10

2016 ,17ம் ஆண்டு ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் செலவில் இந்த சாலை அமைக்கப்பட்டது மயிலாடும்பாறையில் உள்ள துவக்கப் பள்ளிக்கும் இந்த வழியாகத்தான் குழந்தைகள் செல்கின்றனர் .

உடுமலை ஒன்றியம் ராவணாபுரம் கிராமத்தில் உள்ள இணைப்பு சாலை வழியாக பாண்டியன் கரடு , நல்லாறு, மயிலாடும்பாறை, முள்ளுப்பாடி உள்ளிட்ட இடங்களுக்கு கிராம மக்கள் சென்று வருகின்றனர். கடந்த 2016 17ம் ஆண்டு ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் செலவில் இந்த சாலை அமைக்கப்பட்டது .அதற்கு பிறகு புதுப்பிக்கப்படவில்லை. இதனால் சாலை பழுது அடைந்து ஜல்லிக்கற்கள் வெளியே தெரிகிறது. இதனால் வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் அவதிப்படுகின்றனர். இந்த பகுதியில் உள்ள தோட்டத்து சாலைகளுக்கு இந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். மயிலாடும்பாறையில் உள்ள துவக்கப் பள்ளிக்கும் இந்த வழியாகத்தான் குழந்தைகள் செல்கின்றனர். எனவே பழுதடைந்த சாலையை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இங்குள்ள தடுப்பணையின் குறுக்கே தரைமட்ட பாலம் கட்ட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சிறப்பு ரெயில்கள் இயக்கம்

மதுரை, ஆக. 10

மதுரை வழியாக தாம்பரம்நெல்லை சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகிறது. முக்கிய ரெயில் நிலையங்க–ளில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவிக்கப்பட்டுள்ளது. மதுரை விடுமுறை கூட்ட நெரி–சலை சமாளிக்க தாம்பரம் நெல்லை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுவ–தாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. வருகின்ற 11ந்தேதி துவங்கி 15ந்தேதி வரை தொடர் விடுமுறை வருவதால் சென்னையில் உள்ள மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வதால் ரெயில்களில் கூட்ட நெரி–சல் ஏற்படும். இதனை தவிர்க்கும்விதமாகதெற்கு ரெயில்வேயின் சார்பில் தாம்பரம்திருநெல்வேலி தாம்பரம் சிறப்பு விரைவு ரெயில் இயக்க இருப்பதாக ரெயில்வே அறிவித்துள்ளது. அதன்படி வருகின்ற 11ந்தேதி (06051) தாம்பரத்திலிருந்து சிறப்பு விரைவு ரெயில் மாலை 5 மணிக்கு புறப்பட்டு மறுநாள்காலை 4.15 மணியளவில் திருநெல் வேலியை சென்றடையும். அதே போல (06052) திருநெல்வேலியில் இருந்து 12ந்தேதி மாலை 5.50 மணி அளவில் புறப்படும் ரெயில் மறுநாள் காலை 4.10 மணி–யளவில் தாம்பரம் சென்றடையும். இதில் இரண்டு முதல் வகுப்பு ஏசி பெட்டிகள், 9 படுக்கை வசதி உடைய பெட்டி, 5 இரண்டாம் வகுப்பு பொதுப் பெட்டிகள், இணைக்கப்பட்டு இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு ரெயில் தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், திருச்சி, திண் டுக்கல், மதுரை, விருதுநகர், கோவில்பட்டி உள்ளிட்ட முக்கிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# என்.எல்.சி. அனல்மின் நிலையத்தால் கடலூர் கிராமங்களில் சுகாதார சீர்கேடு ஆய்வு: அறிக்கையில் அதிர்ச்சி தகவல்

கடலூர், ஆக. 10

கடலூர் மாவட்டம் நெய்வேலியில் என்.எல்.சி. நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவன நிலக்கரி சுரங்கத்தில் இருந்து வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி மூலம் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் தமிழகம் மட்டுமின்றி புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம் வளையமாதேவி பகுதியில் என்.எல்.சி.2வது சுரங்க விரிவாக்க பணிக்காக விளைநிலங்கள் அழிக்கப்பட்டது. இதற்கு அரசியல் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பா.ம.க.தலைவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் என்.எல்.சி. அலுவலத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்நிலையில் என்.எல்.சி. அனல்மின் நிலையங்களுக்கு அருகில் வசிக்கும் கிராம மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் குற்றசாட்டு எழுந்தது. இது தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டது. பூவுலக நண்பர்கள் மற்றும் மந்தன் அத்யாயன் கேந்திரா சார்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் அனல்மின் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீரில் அதிக அளவு பாதரசம், செலினியம் மற்றும் புளோரைடு இருப்பது தெரியவந்தது. வடக்கு வேலூர் தொல்காப்பியர் நகரில் உள்ள ஒரு ஆழ்துளை கிணறுநீரில்பாதரசத்தின்அளவுஅனுமதிக்கபட்டவரம்பை விட 250 மடங்கு அதிகமாக இருப்பது தெரியவந்தது. அதே கிராமத்தில் குடிநீரில் அதிகஅளவு கொந்தளிப்பு மற்றும் செலினியம் இருப்பது கண்டறியப்பட்டது. இதன் விளைவாக பொதுமக்களுக்கு சீறுநீரக பிரச்சனைகள், சுவாச மற்றும் தோல் பிரச்சனைகள் ஏற்படுவது தெரியவந்தது. மேலும் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்க போதுமான மருத்துவ வசதிகள் இல்லாததும் கண்டுபிடிக்கப்பட்டது. நிலக்கரி தூசி மற்றும் சாம்பலின் மாசுபாடுகள் வீடுகளில் இருப்பதை ஆய்வு கண்டிறியப்பட்டுள்ளது. கரிக்குப்ப கிராமத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் மாசுபடுவதும் கண்டறியப்பட்டுள்ளது. நிலக்கரி சுரங்கங்களில் இருந்து கழிவுகளை வெளியேற்றவும் உள்ளூர் நீர்நிலைகளில் சாம்பலை கொட்டுவதை நிறுத்தவும் சாம்பலை எடுத்து செல்லும் ஓடைகளை தூர்வாரவும் நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. என்.எல்.சி. பகுதிகளில் குடியிருப்போருக்கு வருடத்திற்கு 2 முறை இலவச சுகாராத முகாம் நடத்த வேண்டும். சுகாதார பிரச்சனைகள் உள்ள கிராமங்களை என்.எல்.சி. பொதுமருத்துவமனை கண்காணிக்க வேண்டும். நிலக்கரி தூசி மாசுபாடுகளை தடுக்க சுரங்கத்தை சுற்றி பசுமை பட்டையை உருவாக்க வேண்டும் எனவும் ஆய்வு குழு பரிந்துரை செய்துள்ளது. மனித நேய மக்கள் கட்சி தலைவரும் எம்.எல்.ஏ.வுமான ஜவாஹிருல்லா, மண் வாழ்வியலாளர் சுல்தான் இஸ்மாயில், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவரும், எம்.எல்.ஏ.வுமான வேல்முருகன், பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.



# ஊக்கத்தொகைக்கான திறனாய்வு தேர்வு பிளஸ்1 மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

திருப்பூர், ஆக. 10

அரசு பள்ளி மாணவ, மாணவிகளின் திறனை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்த நடப்பு (2023 24) கல்வியாண்டு முதல் தமிழக முதல்வர் திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட உள்ளது.

9 மற்றும் 10ம் வகுப்புகளின் கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் உள்ள பாடத்திட்டங்களின் அடிப்படையில் இரு தாள்களாக தேர்வு நடத்தப்படும். ஒவ்வொரு தாளிலும் 60 கேள்விகள் இடம் பெறும்,

முதல் தாளில் கணிதம் தொடர்புடைய வினாக்கள் 60 இடம் பெறும். இரண்டாம் தாளில் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் தொடர்புடைய வினாக்கள் 60 இடம் பெறும். முதல் தாள் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரையும், இரண்டாம் தாள் மதியம் 2மணி முதல் மாலை 4 மணி வரையும் நடக்கும். நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடை பின்பற்றி 500 மாணவர்கள், 500 மாணவிகள் வீதம் ஆயிரம் பேர் தேர்வு செய்யப்படுவர். இவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் வீதம், கல்வியாண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும். நடப்பாண்டுக்கான தேர்வு செப்டம்பர் 23ந் தேதி தேர்வு நடக்கும். பிளஸ் 1 வகுப்பு பயிலும் மாணவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் வருகிற 18ந் தேதி வரை பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வு கட்டண தொகையாக 50 ரூபாய் சேர்த்து மாணவர் பயிலும் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# திருப்பூர் மாநகரில் 4 இன்ஸ்பெக்டர்கள் அதிரடி இடமாற்றம்

திருப்பூர், ஆக. 10

காத்திருப்பு பட்டியலில் இருந்த மகாலட்சுமி குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டராக மாற்றப்பட்டுள்ளார்.

மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன் குமார் அபினபு உத்தரவில் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாநகரில் பணியாற்றும் 4 போலீஸ் இன்ஸ்பெக்டர்களை பணியிடம் மாற்றம் செய்து மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன் குமார் அபினபு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி வீரபாண்டி போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த ஆனந்த் சிறப்பு நுண்ணறிவு பிரிவு இன்ஸ்பெக்டராகவும், சிறப்பு நுண்ணறிவு பிரிவு இன்ஸ்பெக்டராக இருந்த செந்தில் பிரபு நல்லூர் போலீஸ் நிலையத்தின் குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டராகவும், காத்திருப்பு பட்டியலில் இருந்த விநாயகம் வீரபாண்டி போலீஸ் இன்ஸ்பெக்டராகவும், அதேபோல் காத்திருப்பு பட்டியலில் இருந்த மகாலட்சுமி குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டராகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

# திருப்பூரில் 2 கல்லூரி பேருந்துகள் மோதி விபத்து




திருப்பூர், ஆக. 10

விபத்தில் 2 பேருந்துகளின் கண்ணாடி உடைந்து சேதம் அடைந்தது சிடிவி., கேமராவில் பதிவாகி அந்த வீடியோக்கள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

திருப்பூர் காங்கயம் ரோடு ராக்கியாபாளையம் சிக்னலில் 2 தனியார் கல்லூரி பேருந்துகள் ஒன்றன் பின் ஒன்றாக மோதி விபத்துக்குள்ளானது. இதில் பஸ்சில் இருந்த கல்லூரி மாணவர்கள்சிலர்லேசான காயங்களுடன் உயிர்த்தப்பினர். மேலும் விபத்தில் 2 பேருந்துகளின் கண்ணாடி உடைந்து சேதம் அடைந்தது. நடுரோட்டில் கண்ணாடி துகள்கள் சிதறியது. இதனால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகினர். அப்போது ராக்கியாபாளையம் சிக்னலில் பணியில் இருந்த தெற்கு போக்குவரத்து காவலர் சதீஷ்குமார் பொதுமக்கள் உதவியுடன் சாலையில் சிதறி கிடந்த கண்ணாடி துகள்களை தனி ஆளாக நின்று அகற்றினார். இதனைப் பார்த்த பொதுமக்கள் சிலர் அவருக்கு உதவி செய்து கண்ணாடி துகள்கள் அனைத்தையும் ரோட்டில் இருந்து அப்புறப்படுத்தினர். போக்குவரத்து போலீசாரின் இந்த செயல் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி., கேமராவில் பதிவாகி அந்த வீடியோக்கள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. போக்குவரத்து போலீசாரின் இந்த செயல் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடையே மிகுந்த பாராட்டை பெற்றுள்ளது.

# குடும்ப பிரச்சனை புகாரில் வாலிபரை கண்மூடிதனமாக தாக்கிய எஸ்.ஐ.,காவலர் பணியிட மாற்றம்

மணப்பாறை, ஆக. 10

திருச்சி மாவட்டம், வையம்பட்டியை அடுத்த முகவனூர் அருகே உள்ள பாம்பாட்டிப்பட்டியைச் சேர்ந்தவர் பாஸ்கர் (வயது 23). இவரின் தாத்தா மருதை என்பவர் அவரின் சகோதரியான பெரியக்காள் (85) என்பவரை பராமரிக்க முடியாமல் முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டதாக கூறப்படுகின்றது. இதனால் ஆத்திரமடைந்த பேரன்பாஸ்கர்பாட்டியை எப்படி முதியோர் இல்லத்தில் சேர்த்தீர்கள் என கேட்டு மருதையிடம் தகராறு செய்து அவரைதாக்கியதாக கூறப்படுகிறது. இதையடுத்து மருதை வையம்பட்டி போலீஸ் நிலையத்தில் பாஸ்கர் மீது புகார் அளித்தார். அதன்படி வையம்பட்டி போலீசார்பாஸ்கரிடம்விசாரித்து உள்ளனர். பின்னர் போலீஸ் நிலையத்தில் வைத்து சப்இன்ஸ்பெக்டர் பிரவீன் குமார், காவலர் செந்தில் குமார் சேர்ந்து பாஸ்கரை சரமாரியதாக தாக்கியதாக தெரிகிறது. பின்னர் அவரை வீட்டிற்கு அனுப்பிவைத்துள்ளனர். மறு நாள் பாஸ்கர் வலி தாங்க முடியாமல் அவதிப்பட்டார். அப்போது வீட்டில் உள்ளவர்களிடம் சம்பவம் பற்றி கூறி உள்ளார். பாஸ்கரின் தொடை பகுதியில் போலீசார் தாக்கியதில் ரத்த உறைந்து காப்பட்டதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். பின்னர் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. தாத்தா பேரன் தகராறில் போலீசார் கண்மூடித்தனமாக தாக்கியதில் வாலிபரின் காலில் ரத்தம் உறைந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தப்பட்டபோலீசார் மீது உயர் அதிகாரிகள் நடிவடிக்கை எடுக்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் பிரவீன் குமார், காவலர் செந்தில் குமார் இருவரையும் ஆயுதப்படைக்கு மாற்றம் செய்து அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

# நாங்குநேரி அருகே அரசு பஸ்சில் சென்ற இளம்பெண்ணை கடத்தியது ஏன்? உறவினர்கள் 4 பேரை பிடித்து போலீசார் விசாரணை

களக்காடு, ஆக. 10

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு பகுதியை சேர்ந்த ஒரு 20 வயது இளம்பெண் நெல்லை புதிய பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு கன்னியாகுமரி பஸ்சில் ஏறி சென்று கொண்டிருந்தார். காரில் ஏற்றி நாங்குநேரி அருகே அரசு பஸ் சென்றபோது, அதன் குறுக்காக ஒரு கார் நிறுத்தப்பட்டு, அதில் இருந்து இறங்கிய 2 பெண்கள் உள்பட 4 பேர் பஸ்சுக்குள் சென்றனர்.

அவர்கள் வழுக்கட்டாயமாக கயத்தாறு இளம்பெண்ணை பிடித்து இழுத்து காரில் ஏற்றி கடத்தி சென்றனர். இது தொடர்பாக அப்பகுதியில் நின்றவர்கள் நாங்குநேரி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் விரைந்து சென்றனர். கார் குறித்து நெல்லை மாவட்ட போலீசாருக்கு தகவல் தெரிவிக்கவே, வாகன சோதனை நடத்தப்பட்டது. கடத்தியது ஏன்? கங்கைகொண்டான் சோதனை சாவடி அருகே நடந்த சோதனையின்போது காரில் இளம்பெண் கடத்தி கொண்டுவரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அந்த காரை நிறுத்தி, அதில் இருந்தவர்களை நாங்குநேரி போலீசில் ஒப்படைத்தனர்.

போலீசார் அவர்களிடம் இளம்பெண்ணை கடத்தியது ஏன்? என்பது குறித்து விசாரித்தபோது, கயத்தாறு பகுதியை சேர்ந்த பெண்ணுக்கு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவருடன் திருமணம் ஆகி ஒரு குழந்தை இருப்பதும், கணவர் இறந்து விட்ட நிலையில் திடீரென உடல் நலக்குறைவுக்குள்ளான குழந்தையை திருவனந்தபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்ததும் தெரியவந்தது.

4 பேரிடம் விசாரணை அப்போது அங்கிருந்த வாலிபருடன் இளம்பெண்ணுக்கு பழக்கம் ஏற்பட்டதும், அவரை பார்க்கவே தற்போது இளம்பெண் பஸ்சில் குமரிக்கு சென்றதும் விசாரணையில் தெரிய வந்தது. அந்த வாலிபரை பார்க்க கூடாது என்பதற்காகவே, அந்த இளம்பெண்ணை அவரது உறவினர்கள் இழுத்து சென்றுள்ளனர் என்பதை போலீசார் அறிந்த னர். இதுகுறித்து போலீசார் இளம் பெண்ணின் உறவி னர்கள் 4 பேரிடம் விசாரித்து வருகின்றனர்.

# சேலத்தில் பெண் உள்பட 2 பேரிடம் ரூ.21 லட்சம் நூதன மோசடி

சேலம், ஆக. 10

சேலம் இரும்பாலை அருகே உள்ள கணபதிபாளையம் சாமுண்டி நகர் பகுதியை சேர்ந்த ஜெகதீஷ். இவரது மனைவி வித்யா (36). இவரது செல்போன் எண்ணிற்கு கடந்த 31ந் தேதி ஆன்லைன் டாஸ்க் செய்யச் சொல்லி குறுந்தகவல் வந்தது. ரூ.11 லட்சம் அதைத்தொடர்ந்து வித்யா அந்த குறுந்தகவலில் குறிப்பிடப்பட்டு இருந்த லிங்கில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பணம் செலுத்தி பதில் அளித்துக் கொண்டு இருந்தார். இப்படியாக ரூ.11 லட்சத்து 14 ஆயிரத்து 143 கட்டி டாஸ்கை முடித்துள்ளார். இந்த நிலையில் அந்த லிங்கில் கூறியபடி வித்யாவின் வங்கி கணக்குக்கு மீண்டும் பணம் வராததால் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த வித்யா இது குறித்து சேலம் மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தனியார் வங்கி இதேபோல் சேலம் தாதகாப்பட்டி அம்பாள் ஏரி ரோடு 6வது கிராஸ் பகுதியை சேர்ந்தவர் கார்த்திகேயன்(41). இவரது செல்போன் எண்ணிற்கு கடந்த 31ந் தேதி பேசிய மர்ம நபர் தனியார் வங்கியில் இருந்து பேசுவதாக கூறியுள்ளார். மேலும் அவர் அனுப்பிய செயலியை செல்போனில் பதிவிறக்கம் செய்ய சொல்லி இருக்கிறார். இதை உண்மை என்று நம்பிய கார்த்திகேயன் மேற்கண்ட செயலியை பதிவிறக்கம் செய்ததும் அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.10 லட்சம் 2 தவணைகளாக எடுக்கப்பட்டது. இதுகுறித்த குறுந்தகவலை பார்த்து அதிர்ச்சியடைந்த கார்த்திகேயன் சேலம் மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# சொத்து தகராறில் முன்னாள் ராணுவ வீரர் கொலை: தந்தை, மகனுக்கு ஆயுள் தண்டனை

தருமபுரி,

தருமபுரி மாவட்டம், தொப்பூர் தர்கா பகுதியைச் சேர்ந்தவர் அய்யாவு, விவசாயி யான இவருக்கு முன்னாள் எல்லை பாதுகாப்பு படை வீரர் ஈஸ்வரன் (45), லாரி டிரைவர் பழனி (42), ராமன் (40), காசி (35) ஆகிய நான்கு மகன்கள் உள்ளனர். அனை வருக்கும் திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகின்றனர். அய்யாவுக்கு வீட்டின் அருகே நாலு ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தை தனித்தனியாக பத்திர பதிவு செய்யாமல் நான்கு பேரும் அனுபவித்துக் கொள்ளு ங்கள் என பிரித்துக் கொடுத்து ள்ளார். பிரித்து கொடுத்துள்ள நிலத்தில் கடந்த சில ஆண்டு களாக தகராறு இருந்து வந்தது. இதில் முன்னாள் ராணுவ வீரர் ஈஸ்வர னுக்கும், அவரது தம்பி பழனிக்கும் தண்ணீர் பாய்ச்சுவது உள்ளிட்ட நிலத்தகராறில் முன் விரோதம் இருந்தது. இந்த நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூலை 15ந் தேதி முன்னாள் ராணுவ வீரர் ஈஸ்வர னுக்கும், லாரி டிரைவர் பழனிக்கும் தகராறு ஏற்பட்டது. இதில் பழனி தான் வைத்திருந்த அறிவாளை எடுத்து ஈஸ்வரன் தலையை வெட்டினார். இதில் சம்பவ இடத்திலேயே ஈஸ்வரன் உயிரிழந்தார். இதனை தடுக்க வந்த ஈஸ்வரன் மனைவி சரண்யாவுக்கும் வெட்டு விழுந்தது. இந்த கொலை சம்பவம் தொடர்பாக தொப்பூர் போலீசார் பழனிக்கு உடந்தையாக இருந்த தந்தை அய்யாவு உள்ளிட்ட 5 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த வழக்கு தருமபுரி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்தது. நேற்று இறுதி விசாரணை நடந்தது.

இதில் நீதிபதி மோனிகா முன்னாள் ராணுவ வீரரை கொலை செய்த லாரி டிரைவர் பழனி, அவரது தந்தை அய்யாவு ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து பரபரப்பு தீர்ப்பு கூறினார். மேலும் சரண்யாவை வெட்டிய வழக்கில் பழனிக்கு இரண்டு ஆண்டு சிறை தண்டனையும், 2000 அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார். இந்த கொலை வழக்கில் தொடர்புடைய காசி, ரேவதி, தனபாக்கியம், ஆகியோர் விடுதலை செய்யப் பட்டனர். அரசு தரப்பில் வக்கீல் சக்திவேல் ஆஜராகி வாதாடினார்.

# சுதந்திர தினம், வார விடுமுறை எதிரொலி தமிழகம் முழுவதும் 1,100 சிறப்பு பஸ்கள் இயக்கம்



சென்னை, ஆக. 10

அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் இளங்கோவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: வார இறுதி நாளான இரண்டாம் சனிக்கிழமை (12ம் தேதி) மற்றும் ஞாயிற்றுக்கிழமையை (13ம் தேதி) தொடர்ந்து, வரும் 15ம் தேதி சுதந்திர தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை அரசு விடுமுறை தினம் என்பதால் அரசுத் துறை மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் ஒரு நாள் விடுப்பு எடுக்கும்பட்சத்தில் தொடர்ந்து 4 நாட்கள் விடுப்பு கிடைப்பதால் பயணிகள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கும், சுற்றுலா செல்வதற்கும் மற்றும் ஆடி மாதம் கோவில் திருவிழாக்களுக்குச் செல்லவும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. தற்போது பயணிகள் முன்பதிவும் கூடுதலாகவே உள்ளது. வெளி ஊர்களுக்குச் செல்லும் பயணிகள் முன்பதிவு செய்வதன் மூலம் பயணிகளின் கூடுதல் தேவையை அறிந்து அதற்கு ஏற்றவாறு கூடுதல் பஸ்களை போக்குவரத்துக் கழகங்கள் இயக்க திட்டமிட இயலும். மேலும், பயணிகள் சிரமமின்றி, பாதுகாப்பாக திட்டமிட்டபடி பயணிக்கவும் உடனடியாக முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 8ம் தேதி அன்று (நேற்று) வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் செவ்வாய்க்கிழமை வரை பயணிகள் அதிகளவில் முன்பதிவு செய்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் தினசரி இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதுநாள்வரை சென்னை மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து பயணம் மேற்கொள்ள 11ம் தேதி 18,199 பயணிகளும், 12ம் தேதி 6,949 பயணிகளும் மற்றும் 13ம் தேதி 4,514 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர். பயணிகள் எந்தவித சிரமமின்றி பயணம் மேற்கொள்ள ஏதுவாக சென்னையில் இருந்து தமிழகத்தின் முக்கிய இடங்களுக்கு 11ம் தேதி கூடுதலாக 500 பஸ்களும் மற்றும் 12ம் தேதி 200 பஸ்களும் இயக்கப்படுகின்றன.

இதேபோல் கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் போன்ற இடங்களில் இருந்து முக்கிய இடங்களுக்கும் மற்றும் பெங்களூருவிலிருந்து பிற இடங்களுக்கும் 400 சிறப்பு பஸ்களும் என மொத்தம் 1,100 சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, 15ம் தேதி சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொள்ள இதுவரை 12,257 பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர். சிறப்பு பஸ் இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பஸ் நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பதிவுக்கட்டணம் உயர்வா..? அரசு வெளியிட்ட கூடுதல் விளக்கம்




சென்னை, ஆக. 10

தமிழ்நாட்டில் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பத்திரப்பதிவு கட்டணம் இருமடங்கு வரை உயர்த்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இந்த தகவல் சொந்த வீடு வாங்க நினைப்பவர்களை அதிர்ச்சி அடைய வைத்தது. பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்நிலையில், அடுக்குமாடி குடியிருப்புகளின் ஆவணப் பதிவு தொடர்பான சமீபத்திய அறிவுரை குறித்த கூடுதல் விளக்கத்துடன், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்ட விரும்பும் கட்டுமான நிறுவனத்தினர் முதலில் இடத்தை விலைக்கு வாங்கி அங்கே அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டுவதற்கு திட்டமிட்டு அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்க முன்வருவோருடன் கட்டுமான ஒப்பந்தம் செய்து கொள்வது வழக்கம். இவ்வாறு அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்க முன்வருபவர்களின் பெயர்களில் ஆவணங்களைப் பதிவு செய்ய பத்திரப்பதிவு அலுவலகங்களுக்கு வரும்போது மேற்படி நிலத்தின் பிரிபடாத பாக மனைக்கான விக்கிரைய ஆவணம் தனியாகவும், கட்டுமான ஒப்பந்த ஆவணம் தனியாகவும் பதிவு செய்யப்படுகிறது. பிரிபடாத பாக மனையின் விக்கிரைய ஆவணத்திற்கு தற்போது நடைமுறையிலுள்ள அட்டவணைப்படி மனையின் சந்தை வழிகாட்டி மதிப்பிற்கு 7% முத்திரைத் தீர்வையும் 2% பதிவுக்கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோருக்கும் கட்டுமான நிறுவனத்தாருக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளும் கட்டுமான ஒப்பந்த ஆவணத்திற்கு அடுக்குமாடி குடியிருப்பின் கட்டுமான விலைக்கு 1% முத்திரைத் தீர்வையும் 1% பதிவுக்கட்டணமும் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த பதிவுக்கட்டணம் மட்டும் 10.07.2023 முதல் 2% உயர்த்தப்பட்டு கட்டுமான விலைக்கு 1% முத்திரைத் தீர்வையும் 3% பதிவுக்கட்டணமும் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையானது அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுவதற்கு முன்பாக பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு மட்டுமே பொருந்தும். இது போன்ற ஆவணங்கள் பதிவுக்கு வருகையில் அடுக்குமாடி குடியிருப்பை ஆவணத்தில் குறிப்பிட வேண்டும் என சார்பதிவாளர்கள் வலியுறுத்தத் தேவையில்லை என்ற அறிவுரை கடந்த 2020ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் காலப்போக்கில் இந்த அறிவுரையை சிலர் தவறாக பயன்படுத்தத் தொடங்கினர். அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானம் முழுவதுமாக முடிக்கப்பட்டு வழங்கப்படும் நிகழ்வுகளில்கூட அடுக்குமாடி குடியிருப்பை நேரடியாக பயனாளர்களுக்கு விற்பனைக் கிரையம் எழுதிக் கொடுத்து ஆவணப் பதிவு செய்வதற்கு பதிலாக கட்டுமானம் முடிந்த பின்னரும்கூட அதனை ஆவணத்தில் தெரிவிக்காமல் கட்டுமான ஒப்பந்த பத்திரம் மற்றும் பிரிபடாத பாக மனைவிக்கிரைய பத்திரம் என்று மட்டுமே எழுதி பதிவு செய்யும் பழக்கம் 2020க்குப் பின்னர் கட்டுமான நிறுவனங்களால் பின்பற்றப்பட்டு வந்தது. முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு தொடர்பான ஆவணங்கள் 7% முத்திரைத் தீர்வை மற்றும் 2% பதிவுக்கட்டணத்தில் அரசுக்கு சேர வேண்டிய கூடுதலான 5% கட்டணம் செலுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக கிரைய பத்திரமாக பதிவு செய்யப்படாமல் 2020 அறிவுரைக்குப் பின்னர் 1% முத்திரைத் தீர்வை மற்றும் 3% பதிவுக் கட்டணம் மட்டுமே செலுத்தி கட்டுமான உடன்படிக்கை ஆவணமாக பதிவு செய்யப்பட்டு தவறாக பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆவணம் பதிவு செய்யும்போது கட்டடம் இருப்பதை ஆவணத்தில் குறிப்பிட வலியுறுத்த வேண்டாம் என கடந்த 2020ஆம் ஆண்டு சார்பதிவாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததால் இது போன்ற நேர்வுகளில் சார்பதிவாளர்கள் கட்டடம் குறித்து கேள்வி எழுப்ப இயலாத நிலை இருந்து வந்தது. இவ்வாறு முழுமையாக முடிக்கப்பட்ட குடியிருப்புகளை வாங்குவோர் கட்டுமான நிறுவனங்களிடமிருந்து கிரையமாக வாங்காமல் கட்டுமான ஒப்பந்தம் மட்டுமே பதிவு செய்யும் நிலை தொடர்ந்ததால் அந்த குடியிருப்பை எதிர்காலத்தில் மறுகிரையம் செய்யும்போது பிரச்சனை எழலாம். இதனைக் கருத்தில் கொண்டே ஆவணங்கள் பதிவின்போது கட்டடத்தின் கட்டுமானம் நிறைவுற்ற சான்றை வலியுறுத்த வேண்டாம் என ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவுரை மட்டுமே தற்போது வாபஸ் பெறப்பட்டுள்ளதே தவிர அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளை வாங்குவோர் கட்டுமான நிறுவனங்களிடமிருந்து நேரடியாக பிரிபடாத பாக மனை மற்றும் குடியிருப்பு இரண்டையுமே கிரையமாக பெற்றுக் கொள்வது இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது, அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படாத நிலையில் கட்டுமான ஒப்பந்தம் செய்து கொண்டு குடியிருப்புகளை வாங்க உத்தேசிப்பவர்களுக்கு மட்டும் ஏற்கெனவே உள்ள அதே நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படும். முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு ஆவணங்களைப் பொருத்த மட்டில் கட்டுமானகிரைய ஆவணமாகவே அதன் தன்மையைப் பாவித்து பதிவு செய்ய வேண்டும் என அனைத்து சார்பதிவாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே கடந்த 2012 முதல் 2020 ஆம் ஆண்டு வரை இருந்த அதே நடைமுறை தான் தற்போது வலியுறுத்தப்பட்டுள்ளதே தவிர சொந்த வீடு வாங்குவோருக்கு பதிவு கட்டண உயர்வு என்று தவறாக செய்தி பரப்பப்படுவது உண்மைக்கு புறம்பானதாகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பணியிடத்தில் உயிரிழக்கும் கட்டுமான தொழிலாளர்கள்: தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு




சென்னை, ஆக. 10

உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்படும் செலவை தொழிலாளர்கள் நல வாரியம் வழங்கும். நிதியுதவியும் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் வாழும் கட்டுமானத் தொழிலாளர்கள், பணியிடத்தில் விபத்தினால் உயிரிழந்தால், அவர்களின் உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்படும் செலவை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உடல் கூராய்விற்கு பின், அரசு அமரர் ஊர்தி மூலம் எடுத்துச் செல்ல ஆகும் தொகையும், விமானம்மூலம்சொந்தஊருக்கு எடுத்து செல்வதாக இருந்தால் அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்வாயிலாக, வழங்கப்படும் என தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

# விஷாலை மிஸ் செய்கிறேன் இயக்குனர் மிஷ்கின் உருக்கம்



ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ள திரைப்படம் 'அடியே'. இப்படத்தின் டிரைலர் இன்று வெளியானது.

ஏண்டா தலையில எண்ண வெக்கல, திட்டம் இரண்டு போன்ற படங்களை இயக்கிய விக்னேஷ் கார்த்திக் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடித்து வரும் படம் 'அடியே'. இப்படத்தில் வெங்கட் பிரபு, கவுரி, மிர்சி விஜய் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். மாலி மற்றும் மன்வி மூவி மேக்கர்ஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார். இப்படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இயக்குனர் மிஷ்கின், "விஷாலை நான் பொறுக்கி என சொன்னதை திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். விஷாலும் நான் துரோகத்தை மறக்கவே மாட்டேன் என்கிறார். அப்படி நான் என்ன துரோகம் செய்தேன் எனத் தெரியவில்லை. விஷால் என் இதயத்துக்கு நெருக்கமானவர். அவருக்கும் எனக்கும் சண்டை நடந்தது. நான் அவரை மிஸ் செய்கிறேன். அவர் என்னை மிஸ் செய்ய மாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கு ஈகோ அதிகம். எனக்கும் ஈகோ இருக்கிறது ஆனால் மேனெஜ் செய்துகொள்வேன். பொறுக்கி என்பது நான் கோபத்தில் சொன்ன வார்த்தை. ஆனால் விஷால் அப்படியில்லை. அவர் ஸ்வீட் பாய். விஷாலுடன் இனி படம் பண்ணவே மாட்டேன். கெஞ்சிக் கொண்டிருக்கமாட்டேன். அவருடன் பணியாற்றியது நல்ல அனுபவம்" என்றார்.

# லியோ இரண்டாம் பாகம் உருவாகிறதா..? எதிர்பார்ப்பில் ரசிகர்கள்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் ‘லியோ’. இதில் நடிகர் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் நடிகர் சஞ்சய் தத்தின் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டது. இந்நிலையில், இப்படத்தின் புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, 'லியோ' திரைப்படத்தை இரண்டு பாகங்களாக உருவாக்க லோகேஷ் கனகராஜ் திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.





# அமோக வெற்றிக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.. நடிகை சுரபி

விக்ரம் பிரபு நடிப்பில் வெளியான 'இவன் வேற மாதிரி' படத்தின் மூலம் கதாநாயகியா அறிமுகமானவர் நடிகை சுரபி. தற்போது “டிடி ரிட்டர்ன்ஸ்” படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார். விக்ரம் பிரபு நடிப்பில் வெளியான 'இவன் வேற மாதிரி' படத்தின் மூலம் கதாநாயகியா அறிமுகமானவர் நடிகை சுரபி. அதன்பின்னர் வேலையில்லா பட்டதாரி, புகழ், ஜீவா உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமடைந்தார். தற்போது சந்தானம் நடிப்பில் வெளியாகி இருக்கும் "டிடி ரிட்டர்ன்ஸ்" படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார். இப்படம் ரசிகர்களை கவர்ந்து நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இப்படம் வெற்றி குறித்து நடிகை சுரபி கூறும்போது, டிடி ரிட்டர்ன்ஸ் அமோக வெற்றிக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். திரையரங்கில் முதல் நாள் பார்வையாளர்களுடன் படத்தை பார்க்கும் போது அவர்களின் சிரிப்புகள், கைத்தட்டல்கள் மற்றும் விசில்கள் ஆகியவற்றைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இது என்னுடைய முதல் ஹாரர் காமெடி படம். ஒரு நடிகராக, இது சவாலாகவும் கற்றல் அனுபவமாகவும் இந்த படம் இருந்தது. பேய் வீடுகளில் இரவும் பகலும் படமெடுத்தது பரபரப்பான அனுபவமாக இருந்தது. மேலும் நான் ஒரு டெம்புள் ரன் விளையாட்டிற்குள் இருப்பது போல் உணர்ந்தேன். சந்தானத்துடன் திரை இடத்தைப் பகிர்வது அருமையாக இருந்தது. அவர் ஒரு சிரமமில்லாத நடிகர், எப்போதும் செட்டில் அனைவரையும் சிரிக்க வைப்பார், இது அனைவருக்கும் வசதியாக இருந்தது. நாங்கள் அனைவரும் ஒரு சிறந்த குழுவாக வேலை செய்தோம். பார்வையாளர்கள் 'சுரபி ரிட்டர்ன்ஸ்' என்று சொல்ல ஆரம்பித்துள்ளனர். தமிழில் அதிக படங்களில் நடிப்பதற்கும், சிறந்த வேலைகள் செய்வதற்கும், மறக்க முடியாத கதாபாத்திரங்களில் நடிப்பதற்கும் இது எனக்கு நம்பிக்கை அளிக்கிறது. மீண்டும் கோலிவுட்டுக்கு வருவதில் மகிழ்ச்சி. என்னுடைய அடுத்த தமிழ் படம் ஜி.வி. பிரகாஷ் ஜோடியாக நடிக்கும் அடங்காதே விரைவில் வெளியாகிறது என்றார்.

# கோமாளி படத்துல ஜி.வி.பிரகாஷ் நடிச்சிருக்காரா.. வைரலாகும் அடியே டிரைலர்



ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் ‘அடியே’. இப்படம் வருகிற ஆகஸ்ட் 25ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. ஏண்டா தலையில எண்ண வெக்கல, திட்டம் இரண்டு போன்ற படங்களை இயக்கிய விக்னேஷ் கார்த்திக் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடித்து வரும் படம் 'அடியே'.

இப்படத்தில் வெங்கட் பிரபு, கவுரி, மிர்சி விஜய் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். மாலி மற்றும் மன்வி மூவி மேக்கர்ஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார். மல்டிவெர்ஸ் சையின்ஸ் பிக்ஷன் காமெடி படமாக உருவாகியுள்ள இப்படத்தின் மோஷன் போஸ்டர் மற்றும் பாடல்கள் அண்மையில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், இப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. விறுவிறுப்பாக உருவாகியுள்ள இந்த டிரைலரை நடிகர் தனுஷ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டார். இந்த டிரைலர் தற்போது வைலாகி வருகிறது. 'அடியே' திரைப்படம் வருகிற ஆகஸ்ட் 25ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சாதியும் இல்லை, தீண்டாமையும் இல்லை.. வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்த யோகிபாபு

தமிழ் திரையுலகில் பிரபல நகைச்சுவை நடிகராக இருந்து வருபவர் யோகி பாபு. பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ள யோகி பாபு, தற்போது தமிழ் திரையுலகில் தவிர்க்க முடியாத நகைச்சுவை நடிகராக வலம் வருகிறார். இவர் தற்போது ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற ஆகஸ்ட் 10ந் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதைத்தொடர்ந்து, பாலிவுட்டில் அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடித்துள்ள ஜவான் திரைப்படத்திலும் நடித்துள்ளார். இப்படம் செப்டம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. முருகன் மீது அதீத பக்தி கொண்ட நடிகர் யோகிபாபு அடிக்கடி கோவிலுக்கு செல்வதை வழக்கமாக வைத்துள்ளார். சமீபத்தில் இவர் சிறுவாபுரியில் உள்ள முருகன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய சென்றிருந்தார். அப்போது யோகிபாபு அங்கிருந்த அர்ச்சகருக்கு கை கொடுத்தார். ஆனால், அந்த அர்ச்சகரோ, யோகிபாபுவுக்கு கை கொடுக்க மறுத்துவிட்டார். இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலான நிலையில் பலர் யோகிபாபு தீண்டாமையை எதிர்கொண்டதாக கண்டனம் தெரிவித்து வந்தனர். வைரலாகும் புகைப்படம் இந்நிலையில், நடிகர் யோகிபாபு இதற்கு விளக்கமளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில், "12 வருடங்களுக்கு மேலாக சிறுவாபுரி கோவிலுக்கு சென்று கொண்டிருக்கிறேன். எனக்கு அந்த அர்ச்சகரை அப்போதிலிருந்தே தெரியும். அவர் ரொம்ப நல்ல மனிதர். யாரோ வேண்டுமென்றே இவ்வாறு தவறான வதந்தியை பரப்பி வருகின்றனர். இதில் சாதி எல்லாம் பார்க்க வேண்டாம். அர்ச்சகரால் எந்த தீண்டாமையும் நடக்கவில்லை. அவர்கூட நான் கைக்குலுக்கப் போகவே இல்லை. டாலர் பத்திதான் விசாரித்தேன். அந்த வீடியோவை நல்லா பார்த்தாலே இது தெரியும்." என்று கூறியுள்ளார்.





# அதிரடியில் மிரட்டிய சூர்யகுமார் யாதவ் 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி

முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 5 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய இந்தியா 164 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

வெஸ்ட் இண்டீஸ், இந்தியா இடையிலான 3வது டி20 போட்டி இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பேட்டிங் தேர்வு செய்தது அதன்படி, முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 159 ரன்கள் எடுத்தது. பிராண்டன் கிங் 42 ரன்கள் எடுத்தார். அதிரடியாக ஆடிய கேப்டன் ரோவ்மென் பாவெல் 19 பந்தில் 40 ரன்கள் குவித்தார். இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து, இந்திய அணி 160 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஜெய்ஸ்வால் ஒரு ரன்னிலும், சுப்மன் கில் 6 ரன்னிலும் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தனர். இதனால் இந்தியா 34 ரன்களுக்கு 2 விக்கெட் இழந்து திணறியது. இதையும் படியுங்கள்: 3வது டி20 போட்டியில் வெற்றி பேட்ஸ்மேன்களுக்கு பாராட்டு தெரிவித்த ஹார்திக் பாண்ட்யா அடுத்து இறங்கிய சூர்யகுமார் யாதவ் தொடக்கம் முதலே அதிரடியாக ஆடினார். கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். அவருக்கு திலக் வர்மா நன்கு ஒத்துழைப்பு கொடுத்தார். அதிரடியாக ஆடிய சூர்யகுமார் அரை சதம் கடந்தார். 3வது விக்கெட்டுக்கு இணைந்த சூர்யகுமார் யாதவ் திலக் வர்மா ஜோடி 87 ரன்கள் சேர்த்தது. சிறப்பாக ஆடிய சூர்யகுமார் யாதவ் 44 பந்தில் 4 சிக்சர், 10 பவுண்டரிகள் உள்பட 83 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய கேப்டன் ஹார்திக் பாண்ட்யா, திலக் வர்மாவுடன் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். இறுதியில், இந்தியா 3 விக்கெட்டுக்கு 164 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. திலக் வர்மா 49 ரன்னும், பாண்ட்யா 20 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். இந்த வெற்றியின் மூலம் டி20 தொடரில் இந்தியா 12 என பின்தங்கியுள்ளது.

# கிஷான் கிஷன் சரிபட்டு வரமாட்டாரு: டி20க்கு ஜெய்ஸ்வால்தான் சரி வாசிம் ஜாபர்





ஜெய்ஸ்வால் டி20 கிரிக்கெட்டில் பயமின்றி அதிரடியாக விளையாடக் கூடியவர். டெஸ்ட் தொடரில் நல்ல ரன்களை அடித்த அவர் வாய்ப்புக்காக காத்திருக்கிறார். வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதல் 2 டி20 போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்ததையடுத்து பல விமர்சனங்கள் வந்த வண்ணம் உள்ளது. 3வது டி20 போட்டியில் இந்தியா வென்றே ஆக வேண்டிய கட்டாயத்தில் இன்று களமிறங்குகிறது.

இந்நிலையில் டி20 கிரிக்கெட்டில் ஆரம்பம் முதலே தடுமாறி வரும் இஷான் கிசானுக்கு பதிலாக இன்றைய போட்டியில் யசஸ்வி ஜெய்ஸ்வால் விளையாட வேண்டுமென முன்னாள் வீரர் வாசிம் ஜாபர் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இஷான் கிஷன் தடுமாறுகிறார் என்பதை நாம் அனைவரும் அறிவோம் என்பதால் அவருக்கு சற்று இடைவெளி கொடுக்க வேண்டும். ஒருவேளை அவர் தமக்கு கிடைக்கும் அடுத்த வாய்ப்பில் வலுவான கம்பேக் கொடுக்கலாம். எனவே அவருடைய இடத்தில் நான் எந்தவித சந்தேகமுமின்றி யசஸ்வி ஜெய்ஸ்வாலை தேர்ந்தெடுப்பேன். ஏனெனில் அவர் டி20 கிரிக்கெட்டில் பயமின்றி அதிரடியாக விளையாடக் கூடியவர். குறிப்பாக வேகம் மற்றும் சுழல் ஆகிய 2 வகையான பவுலிங்க்கு எதிராகவும் அசத்தும் திறமை அவரிடம் இருக்கிறது. அத்துடன் தற்போது உச்சகட்ட பார்மில் இருக்கும் அவருக்கு வாய்ப்பு கொடுத்து அதில் என்ன செய்கிறார் என்பதை ஏன் பார்க்க கூடாது? சொல்லப்போனால் டெஸ்ட் தொடரில் நல்ல ரன்களை அடித்த அவர் வாய்ப்புக்காக காத்திருக்கிறார். மேலும் திலக் வர்மா போன்ற புதியவருக்கு வாய்ப்பு கொடுத்து புதிய காற்றை சுவாசிக்கும் முயற்சிக்கும் நீங்கள் ஏன் அவருக்கு வாய்ப்பு கொடுக்கக் கூடாது. இவ்வாறு வாசிம் ஜாபர் கூறினார்.





# பெண்கள் உலகக்கோப்பை கால்பந்து: காலிறுதி ஆட்டங்கள் நாளை தொடக்கம்

11ந்தேதி நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் ஸ்பெயின் நெதர்லாந்து, ஜப்பான் சுவீடன் அணிகள் பலப்பரீட்சை 12ந்தேதி நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் இங்கிலாந்து கொலம்பியா, ஆஸ்திரேலியா பிரான்ஸ் அணிகள் பலப்பரீட்சை

பெண்கள் உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றன. தற்போது காலிறுதிக்கு முந்தைய நாக்அவுட் சுற்று போட்டிகள் முடிவடைந்துள்ளன. நேற்று கடைசி இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன.

ஒரு ஆட்டத்தில் கொலம்பியா ஜமைக்கா அணிகள் மோதின. இதில் கொலம்பியா 10 என ஜமைக்காவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் மொரோக்கோ அணிகள் மோதின. இதில் பிரான்ஸ் 40 என மொரோக்கோவை துவம்சம் செய்து காலிறுதிக்கு முன்னேறின. காலிறுதி ஆட்டங்கள் வருகிற 11 மற்றும் 12ந்தேதிகளில் நடைபெறுகின்றன.

11ந்தேதி நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் ஸ்பெயின் நெதர்லாந்து, ஜப்பான் சுவீடன் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. 12ந்தேதி நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் இங்கிலாந்து கொலம்பியா, ஆஸ்திரேலியா பிரான்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.